பக்கங்கள் 18+ 02

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 32 புதன்கிழமை 16.07.2024 | அதிர்வு 340

### 3 கோடி ரூபா பெறுமதியான

## போதைப்பொருளுடன் வர்த்தகர் ஒருவர் கைது



3 கோடியே 11 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் வர்த்த

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### பிரதேச சபை உறுப்பினரை இடைநிறுத்தும்

# தமிழரசின் முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்க யாழ். நீதிமன்றம் மறுப்பு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தம்மை இடைநிறுத்தி கட்சி எடுத்த முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரி வலிகாமம் வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் இராஜேந்திரம் தாக்கல் செய்த வழக்கில், இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கையை நிராகரித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

02▶







### மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு

# குப்பை ஏற்றும் வாகனத்தில் சென்ற தமிழரசுக் கட்சியின் தவிசாளர்கள்

குப்பை ஏற்றும் வாகனத்தில் ஏறி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செங்கலடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளின் தவிசாளர்கள் சென்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

இந்தநிலையில், செங்கலடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளின் தவிசாளர்கள், குப்பை ஏற்றும் வாகனத்தில் ஏறி இந்தக் கூட்டத்துக்குச் சென்றனர்.

இதுவரையில் தமது சபைகளுக்கான வாகனங்கள் வழங்காத நிலையில் தாம் குப்பை ஏற்றும் வாகனத்தில் ஏறிப் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.



# நாகபாம்பு தீண்டி சிறுவன் மரணம்

ஹங்குரன்கெத்த, உடகலஉட பிரதேசத்தில் நாகப்பாம்பு தீண்டியதால் 4 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் பெற்றோர் வயலில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில், அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனை நாகபாம்பு தீண்டியுள்ளது.

இதனால் சிறுவனின் காலில் ஏற்பட்ட காயத்துக்கு உடனடியாகக் கைவைத்தியம் செய்யப்பட்டது. எனினும், அது பலனளிக்காத காரணத்தால் பெற்றோர் ரிகிலகஸ்கட வைத்தியசாலையில் சிறுவனை அனுமதித்துள்ளனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி சிறுவன் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சிறுவனுக்கு அளிக்கப்பட்ட கைவைத்தியத்தின்போது விஷம் மேல் ஏறாமல் இருப்பதற்காக, இறுக்கமாகக் கட்டு போடப்பட்ட காரணத்தினால் இரத்த ஓட்டம் தடைப்பட்டிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உரிய வேளையில் சரியான முறையில் சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் சிறுவனைக் காப்பாற்றியிருக்க முடியும் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினரான இராஜேந்திரம் பிரதேச சபை தலைவர், உப தலைவர் தெரிவுகளின் போதும், தெரிவுக்கான தேர்தல் முறைமை தொடர்பிலும் கட்சி நிலைப்பாட்டுக்கு மாறாக சபை அமர்வில் நடந்து கொண்டார் என்று தெரிவித்து, அதற்காக அவரிடம் விளக்கம் கோரியும், அவரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தியும் கட்சியின் பொதுச்செயலாளர் அவருக்கு அறிவித்திருந்தார்.

கட்சியில் அந்த முடிவை இரத்துச் செய்து உத்தரவிடக் கோரியும், அந்த முடிவுக்கு இடைக்காலத் தடை விதிக்க வலியுறுத்தியும், இதுபோன்ற கட்சியின் இடைநிறுத்தல் முடிவுகளை பகிரங்கப் படுத்தக் கூடாது என்று வழிகாட்டுதல் பணிப்புரை வழங்கும்படி வேண்டியும் இந்த வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சுபாகர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர் தரப்பு சட்டத்தரணி தனி ஒரு தரப்பாக முன்னிலையாகி தமது விண்ணப்பத்தை முன் வைத்தார்.

வழக்கைப் பரிசீரித்த மாவட்ட நீதிபதி சதீஸ்வரன், இடைக்கால உத்தரவு தொடர்பான தீர்ப்பை இன்று புதன்கிழமை வழங்குவதாகத் தெரிவித்து இருந்தார். தீர்ப்பு இன்று காலை வழங்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் தேர்வு தொடர்பாகக் கட்சியின் நிலைப்பாடு தமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவரிடம் விளக்கம் கோரி பொதுச்செயலாளர் அனுப்பிய கடிதத்தில், அந்த விடயம் அவருக்குத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதைப் பொதுச்செயலாளர் குறிப்பிட்டிருக்கின்றமையை நீதிபதி தமது நிராகரிப்பு உத்தரவில் சுட்டிக்காட்டினார்.

கட்சி விளக்கம் கோரியுள்ளது. விளக்கத்தைப் பார்த்து ஒரு முடிவை – தீர்மானத்தை – கட்சி எடுப்பதற்கு முன்னர் நீதிமன்றத்தை அணுகி தடை விதிக்கும்படி கோர வேண்டிய தேவை மனுதாரருக்கு அவசரமாக எழுந்திருப்பதாக நீதிமன்றம் கருதவில்லை என்று நீதிபதி தமது இன்றைய உத்தரவில் சுட்டிக்காட்டினார்.

எனினும், வழக்கின் எதிர் மனுதாரர்களான கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி கட்டளை வழங்கினார். அத்துடன் இந்த வழக்கை எதிர்வரும் ஆகஸ்ட் 6 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

மேற்படி உறுப்பினரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் கட்சியின் முடிவை ஆட்சேபித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்சியின் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பி இருந்தார்.

அந்தக் கடிதத்தின் பிரதி மனுதாரரின் மனுவோடு இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கட்சியின் மத்திய குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்படவில்லை எனத் தெரிவித்து மாவை சேனாதிராஜா கலையமுதன் என்பவர் வழங்கிய சத்தியக் கடுதாசி ஒன்றும் மனுவோடு இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## 3 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் இன்று புதன்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு – மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய வர்த்தகர் ஆவார்.

சந்தேகநபரான வர்த்தகர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்தில் இருந்து இந்தியாவின் மும்பை நகரத்துக்குச் சென்று பின்னர் அங்கிருந்து இன்று காலை 10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் சந்தேகநபரான வர்த்தகர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது சுங்க அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரான வர்த்தகர் கொண்டு வந்த பயணப் பொதிகளில் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 கிலோ 117 கிராம் குஷ் போதைப்பொருள் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட வர்த்தகர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்குக் கனடா உதவும்

## தேசிய மக்கள் சக்தியின் யாழ். எம்.பிக்களிடம் தூதுவர் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்குக் கனடாவும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கும் என்று அந்நாட்டுத் தூதுவர் எரிக் வோல்ஸ், தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான கனடாத் தூதுவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா மற்றும் க.இளங்குமரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம், காணிப் பிரச்சினை, வடக்கை இலக்காகக் கொண்டு அமையவுள்ள முதலீட்டு வலயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரை



ஒத்துழைப்புக்களை வழங்கும் என்று தூதுவர் பதிலளித்துள்ளார்.

"கடந்த அரசைப் போன்று இல்லாமல் இந்த ஆட்சியாளர்கள் மிகவும் வித்தியாசமானவர்கள். மக்களுக்குச் சேவை செய்யக்கூடியவர்களே தற்போது இருக்கின்றார்கள். தற்போதைய ஜனாதிபதியும் சர்வ அதிகாரம் கொண்டவராக இல்லாமல் மக்களின் தலைவனாகச் செயற்படுகின்றார்." – என்றும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் முதலீடுகள் செய்வதற்கான சூழல் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

வடக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்கு வைத்து கனடாவால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்க அரசின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், தூதுவரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இலங்கைக்கான கனடாத் தூதுவர் தமது சேவைக் காலம் முடிவடைந்து இந்த மாதத்துடன் தாயகம் திரும்பவுள்ளார். அவர் ஆற்றிய சேவைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்






# காணாமல் ஆக்கப்பட்ட சகலருக்கும் நீதி வழங்கு

## மன்னாரில் கையெழுத்து வேட்டை

(எஸ்.ஆர்.லெம்பேட்)

“சம உரிமைகளை வெல்வோம்! இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம்!!” எனும் தொனிப்பொருளில் சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்த எதிர்ப்புப் பதாகையில் கையொப்பமிடும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, “காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, இன்னொரு அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய், அனைத்து தேசிய இனங்களுக்கு சம உரிமைகளை உறுதி செய்யும் அரசியல் அமைப்புக்காகப் போராடுவோம்” உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து எதிர்ப்புப் பதாகையில் கையொப்பம் சேகரிக்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்துக் கையொப்பத்தைப் பதிவு செய்தனர்.













# வடக்கு ஆளுநரால் வழங்கப்பட்ட நியமனங்கள்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் வடக்கு மாகாணத்தின் 5 செயலாளர்கள், மாநகர சபை ஆணையாளர் மற்றும் பதில் ஆணையாளர் ஆகியோருக்கான நியமனங்கள் ஆளுநர் செயலகத்தில் வைத்து இன்று புதன்கிழமை நண்பகல் வழங்கி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாண சபைக்குப் புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றிய மு.நந்தகோபாலன், மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய ச.சிவஸ்ரீ வடக்கு மாகாண சபைக்குப் புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றிய அ.சோதிநாதன் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம், மாகாண காணி பதில் ஆணையாளராகவும் அவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஆ.சிறீ நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய பொ.வாகீசன், வவுனியா மாநகர சபையின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசனும் கலந்துகொண்டிருந்தார்.












## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# சாதகமும் பாதகமும்

எப்பவுமே ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருக்கும். ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து நாம் தீர்மானிக்க முடியாது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்பவர்களின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது. ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் மொத்தம் 144,379 இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தப் புள்ளிவிவரங்களின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடிச் செல்லும் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்த ஆறு மாத காலத்தில் மொத்தமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றவர்களில் 88 ஆயிரத்து 684 பேர் ஆண் பணியாளர்கள். இதே காலப்பகுதியில் 55 ஆயிரத்து 695 பெண் பணியாளர்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கைப் பணியாளர்களின் பிரதான தேர்வாக குவைத்தே தொடர்கிறது. அந்நாட்டிற்கு 38 ஆயிரத்து 806 பேர் சென்றுள்ளனர். இதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு 28 ஆயிரத்து 973 பேரும், கட்டாருக்கு 21 ஆயிரத்து 958 பேரும் சென்றுள்ளனர்.

கிழக்கு ஆசிய நாடுகளிலும் இலங்கையர்களின் ஆர்வம் அதிகரித்து வருவதை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. ஜப்பான் 6,073 இலங்கைத் தொழிலாளர்களை வரவேற்றுள்ளது. தென் கொரியா 3,134 இலங்கையர்களை ஏற்றுக் கொண்டுள்ளது.

இதே சமயம் இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து நாடு பெற்றுக் கொள்ளும் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களும் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 3.73 பில்லியன் அமெரிக்க டொலர்களை இது எட்டியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட 3.14 பில்லியன் அமெரிக்கடொலர்களுடன்ஒப்பிடுகையில் 18.9 வீதஅதிகரிப்பு ஆகும்.

ஜூன் மாதத்தில் மட்டும் பணப் பரிமாற்றங்கள் 635.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான மொத்தப் பணப் பரிமாற்றங்கள் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கணித்துள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் முக்கிய பங்களிப்பாக இருக்கும் என்பது உண்மைதான்

ஆயினும், 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், வெளிநாடுகளில் சிறந்த வாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறும் திறமையான நிபுணர்கள் மற்றும் தொழிலாளர்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக, 'இலங்கையில் மூளை வடிகால்' ஒரு குறிப்பிடத்தக்க கவலையாக உள்ளமையை மறைக்க முடியாது. இந்த வெளியேற்றம் சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பாதிக்கிறது. அது மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அது மேலும் மெதுவாக்குகின்றது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.




# கறுப்பு ஜூலை நினைவேந்தலும் விடுதலைக்கான போராட்டமும்

## யாழ். கிட்டு பூங்காவில் ஜூலை 24, 25ஆம் திகதிகளில்

(எஸ்.நிதர்ஷன்)

கறுப்பு ஜூலை பொது நினைவேந்தலும் – விடுதலைக்கான போராட்டமும் குரலற்றவர்களின் குரல் அமைப்பால் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் யாழ். ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

“இதுவரை காலமும் இலங்கையின் கொடூர சிறைக்கூடங்களுக்குள் நயவஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கான நீதி நியாயத்தைக் கோருகின்ற பொது நினைவேந்தலும், 30 ஆண்டுகள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளுக்குள் வாடிக்கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய நூதனக் கவனவீர்ப்புப் போராட்டமும் மக்களது ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறான அறப் பணிகளைத் தொடர்ந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே, சமூகத்தின் பெயரில் சிறை வாடும் எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி நியாயமும் விடுதலையும் கிடைக்கப் பெறும் எனும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனித நேயம் கொண்ட நல்லுள்ளங்கள் ஒருங்கிணைந்து முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையிலான உதவிகளை “விடுதலைக்கான திறவுகோல்களைக் கனதியாக்குவோம்” என்கின்ற உண்டியல் திட்டத்தின் ஊடாக மனமுவந்து நல்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பொதுவெளி கவனவீர்ப்புப் போராட்டத்தில் இன, மத மொழி கடந்து, வயது பால் வேறுபாடின்றி, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவோம். சமூக நீதி சமூக நியாயத்தும் விடுதலைப் பயணம் நோக்கிய செயற்பாடுகளைப் பலப்படுத்தி முன்நகர்வோம்.

நல்லெண்ணமும் கருணை உள்ளமும் கொண்ட அனைவரும் சிரமம் பாராது வந்து கலந்துகொள்வதன் மூலமே இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு திரட்சிமிகு அழுத்தத்தைக் கொடுத்து அன்புக்குரிய எமது சிறை உறவுகளை உயிர்ப்புடன் விடுவிக்க முடியும்.

அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுத்து உறவுகளைச் சிறை மீட்போம் வாருங்கள் எனக் குரலற்றவர்களின் குரல் அமைப்பினராகிய நாம் எமது மக்களை நோக்கி உரிமையோடு அழைப்பு விடுக்கின்றோம்.” – என்றார்.





# சிறந்த பெறுபேறு பெற்ற மாணவருக்கு கௌரவம்



(எம்.ஏ. றமீஸ்)

இம்முறை வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைவாக 9 ஏ, பி பெறுபேறு பெற்ற அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய மாணவர் எம்.ஜே.எம். வசிபை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

அறபா 94 நண்பர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு மாணவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது அமைப்பின் உப தலைவர் எஸ். எல்.ஜெலீல் அறுசுல்லாவின் புதல்வரும் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவருக்காக அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் அஸ்வர் சாலி உள்ளிட்ட குழுவினர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.





# கல்முனை மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு பிரியாவிடை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத் தராகக் கடமையாற்றி, அக்கரைப்பற்று மாநகர சபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் எம்.ஏ. நிசாருக்கான பிரியா விடை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை பொறியியல் பிரிவின் ஏற்பாட்டில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை மாநகர சபையில் அவரது எட்டு வருட கால உன்னத சேவை குறித்து எடுத்தியம்பி, பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன் நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவிக் கப்பட்டார்.



### கனடா செல்லும் ஆசையில்

# பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து ஏமாந்த இளம் குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

கனடா நாட்டுக்குச் செல்வதற்காக முகவர் ஒருவரிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து ஏமாந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடி வெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம், புங்குடுதீவு பகுதி யைச் சேர்ந்த செல்வராசா பாஸ்கரன் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கனடா செல்வதற்காகக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் முகவர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபா பணத்தை அவர் வழங்கியுள்ளார்

இரண்டு வருட காலமாக கனடா அனுப்பாது முகவர் தொடர்ந்து ஏமாற்றி வந்தமையால், பணத்தை மீளத் தருமாறு முகவருடன் தர்க்கப்பட்டு வந்துள்ளார். அதனால் அவர் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகி இருந் துள்ளார்.

இந்நிலையில் அவர் கடந்த ஞாயிற் றுக்கிழமையும் தனது பணத்தை மீளத் தருமாறு முகவருடன் தர்க்கம் புரிந்த நிலையிலும் பணத்தை முகவர் கொடுக்க மறுத்தமையால், விரக்தியில் தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அதனை அவதானித்த வீட்டார், அவரை மீட்டு புங்குடுதீவு வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரி ழந்துள்ளார்.



# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா விஜயம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அரச நிதியில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடத்தொகுதியினை அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா நேற்று முன்தினம் திங்கள் கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

அக்கட்டிடத்தொகுதியில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டதோடு, அதனை பொதுமக்கள் பாவனைக்கு உதவும் வகையில் விரைவில் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை அவசரமாக மேற்கொள்ளுமாறும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எப். ரகுமானிடம் கேட்டுக் கொண்டார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரகுமான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஹாரீஸ், எலும்பியல் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். வரூன் பிரசாத், டாக்டர் பாறூக், பொது சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யூ, எம்.சமீம், கணக்காளர் ஜவாஹிர் உட்பட கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.ஆரிப் எனப்பலரும் கலந்து கொண்டனர்.









# எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் காவத்தமுனைக்கு விஜயம்

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் எம்.தாஜுதீனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்று செவ்வாய்க் கிழமை காவத்தமுனைக்கு விஜயம் செய்து பிரதேச அபிவிருத்தி தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன் போது காவத்தமுனை விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா போன்றவற்றைப் பார்வையிட்டு குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், அதனை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்வுடன், தவிசாளர் எம்.எச்.எம்.பைறூஸ், முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத்தொகுதி அமைப்பாளர் ஹபீப் றிபான், பிரதேச சபை உறுப்பினர் எம்.தாஜுதீன் மற்றும் பிரதேச இளைஞர்கள், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.









# காரைதீவு பத்திரகாளி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் இன்று புதன்கிழமை கடல் நீர் கொணர்ந்து கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 09 தினங்கள் சடங்கு இடம்பெற்று, 10 ஆம் நாள் இம் மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது.

காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் தலைவர் கலாபூஷணம் எஸ். இராமநாதன் தலைமையில், பிரதம பூசகர் கி.சரவணபவா பங்கேற்புடன் உற்சவம் இடம்பெறவுள்ளது.

தினமும் பகல் பூசை 12.30 மணிக்கும், இரவு பூசை 7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என ஆலய பரிபாலன சபையின் செயலாளர் மா.கணேசலிங்கம் தெரிவித்தார்.

18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா விஷ்ணு ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெற இருக்கின்றது.

22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் வீதியுலா வருகிறார். 25 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம் பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும்.

அன்றைய தினம் அன்னதான நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

இறுதியாக 1 ஆம் திகதி வெள்ளிக் கிழமை எட்டாம் நாள் வைரவர் திருச் சடங்கு இடம்பெறும் என்று செயலாளர் கணேசலிங்கம் மேலும் தெரிவித்தார்.





# சம்மாந்துறை பிரதேச சபை அமர்வை பார்வையிட்ட அல் முனீர் பாடசாலையின் மாணவ தலைவர்கள்

(தில்சாத் பர்வீஸ்)

மாணவர்களுக்கு அரசமைப்புகள், நிர்வாக செயல்முறைகள் மற்றும் மக்களாட்சியின் நடைமுறை அனுபவத்தை வழங்கும் நோக்கில், அல் முனீர் பாடசாலையைச் சேர்ந்த மாணவ தலைவர்கள் குழு சம்மாந்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வை பாடசாலை அதிபர் ஏ.அப்துல் றஹீமின் வழிகாட்டுதலில் நேற்று செவ்வாய்க் கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவ்வாறு மாணவர்கள், மக்களுடைய பிரச்சனைகள் எவ்வாறு விவாதிக்கப்படுகின்றன, தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன, ஒரு மக்கள் பிரதிநிதியின் பங்கு என்ன என்பது போன்ற விடயங்களை நேரடியாகக் கற்றுக்கொண்டனர்.

பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மாணவர்களை வரவேற்று, அமர்வின் முக்கியத்துவம், சபையின் வேலைத்திட்டங்கள் மற்றும் பொதுமக்கள் சேவைகள் குறித்து விளக்கினர்.

இதுதொடர்பில் பாடசாலை ஆசிரியர் குழுவினர் தெரிவிக்கையில்,

“மாணவர்கள் புத்தகத்தில் மட்டுமல்லாமல், செயல்முறை அனுபவத்தாலும் கற்றால், அது அவர்களின் அறிவை விரிவுபடுத்தும். இந்த பயணம் மாணவர்களின் எதிர்கால சமூக விழிப்புணர்வுக்கு ஒரு நல்ல தொடக்கமாக அமையும்.” எனக் கூறினர்.

இந்த அனுபவம், மாணவ தலைவர்கள் இடையே சமூக பொறுப்புணர்வையும், வழிகாட்டல் திறனையும் வளர்த்ததோடு, மக்கள் சார்ந்த நிர்வாக அமைப்புகள் குறித்து நேரடி புரிதலையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், பிரதி அதிபர் எம். சீ.முபாரக் அலி, பாடசாலை அபிவிருத்தி சங்க நிறைவேற்று குழு செயலாளர் வீ.எம். முஹம்மட் என பலரும் கலந்து கொண்டனர்.








# தையல் பயிற்சிக்கான ஆரம்ப நிகழ்வை தொடக்கி வைத்தார் அரசாங்க அதிபர்

(பா.சதீசன்)

கிளிநொச்சி மணியங்குளத்தில் ஜீவ ஊற்று அன்பின் கரத்திற்கான மாவட்ட அலுவலகம், தையல் பயிற்சிக்கான ஆரம்ப நிகழ்வும் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தையல் பயிற்சியினை நிறைவு செய்த 4 ஆவது அணியினருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

அதன் ஸ்தாபகர் தம்பிராசா ஜெஜீவனால் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 11 வருடங்களாக செயற்பட்டு வட கிழக்கில் 170 இற்கு மேற்பட்ட வீடுகள், மருத்துவ வசதி, நீர் வசதி, மலசலகூட வசதி, கல்விக்கான உதவிகள், தையல் பயிற்சி போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் தலைவர் ஞானப்பிரகாசம் தயாளினி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிராமசேவகர் சுதர்சன் சர்மிளா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் துஸ்யந்தன் சாந்தகுமாரி, ஜீவ ஊற்று அன்பின் கரம் உப தலைவர் எஸ். சீலன், கிளிநொச்சி, முல்லைத்தீவு உறுப்பினர்கள், கரைச்சி பிரேதேச சபை உறுப்பினர் , வணங்காமண் மறுவாழ்வு கழகத்தின் தலைவர் ஜீவா , வன்னி தமிழ்மக்கள் ஒன்றியத்தினர், கிரிவலம் அறக்கட்டளையினர், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.














# அரசியல் கட்சி உறுப்பினர்களுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடல்

(மன்னார் நிருபர்)

வாக்கெடுப்பு நிலையங்களுக்கான உட்பிரவேசித்தல் வசதி மற்றும் அதன் தன்மை தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவுடன் பஃவ்ரல் அமைப்பு இணைந்து மேற்கொள்ளும் ஆய்வுக்காக மன்னார் மாவட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களு டனான கலந்துரையாடல் நேற்று மன் னாரில் இடம் பெற்றது.

இலங்கை தேர்தல் ஆணைக் குழுவுடன் பஃவ்ரல் அமைப்பு இணைந்து இலங்கையில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 1500 வாக்கெடுப்பு நிலையங்களின் தன்மை,வாக்கெடுப்பு நிலையங்கள் இயலாமைக்கு உட்பட்ட நபர்கள் பிரவேசிப்பதற்கு தேவையான வசதிகளை கொண்டுள்ளதா? மேலும் வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தரவை சேகரிக்கும் முகமாக தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆய்வை மேற்கொண்டு வருகின்றது,

மேற்படி மாவட்டங்களில் மன்னார் மாவட்டமும் ஒன்றாகும்.மேலும் இது தொடர்பாக மன்னார் மாவட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், சிவில் சமூக உறுப் பினர்களுடனான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 1.30 மணி வரை நடைபெற உள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களை தெரிவு செய்வதற்காக கையாளப்படும் உத்திகள் மற்றும் வாக்கெடுப்பு நிலை யங்கள் தெரிவு செய்யப்படுகின்ற விதம் தொடர்பாக தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

மேலும், தேர்தல் ஆணைக்குழுவின் 2026 - 2029 மூலோபாய திட்டம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தன்,பஃவ்ரல் அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுஜீப கஜநாத் ஆகியோர் பங்கேற்றனர்.















# மாற்றுத் திறனாளிகளின் சுய உதவி குழு வலுவூட்டல் குறித்து கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகளை வலுவூட்டல் தொடர்பான சுய உதவி குழு கலந்துரையாடல் நேற்று புதுக்குடியிருப்பு கிராம சேவகர் கட்டடத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் மாற்றுத் திறனாளிகளின் சங்கங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் திட்டமொன்றை வழங்குவது தொடர்பிலும் மாதாந்த கொடுப்பனவு பெறும் பயனாளிகளை மாதாந்தம் கையொப்பமிடுவது தொடர்பில் எதிர்கால சுய உதவி குழு மாற்றுத் திறனாளிகளின் சங்கங்களை வலுவூட்டுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மருதம் மாற்றுத் திறனாளி சங்க உறுப்பினர்கள்,பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது மாவடி வீதியில் வடிகான்கள் துப்பரவு செய்யும் பணி முன்னெடுப்பு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது – 3 ஆம் பிரிவு மாவடி வீதியின் வாடிகான்களைத் துப்பரவு செய்யும் பணி பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலத்தின் பின்னர் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவின் ஒருங்கிணைப்பாளர் எம்.ஐ நஜீம் தலைமையில் கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களாக நடைபெற்றது.இதன்போது ஒத்துழைப்பு வழங்கிய கல்முனை மாநகர ஆணையாளர், பொறியியலாளர் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.



# சென்னையிலுள்ள துணை உயர்ஸ்தானிகரகத்திற்கு நிவாரணம் வழங்கிய சென்னை மேல் நீதிமன்றம்

சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம், அதன் முன்னாள் ஊழியரான இந்தியப் பிரஜை ஒருவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என உத்தரவிட்ட தனி நீதிபதியின் உத்தரவை, சென்னை மேல் நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது.

துணை உயர்ஸ்தானிகரகம் தாக்கல் செய்த மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்டு, மூவரடங்கிய நீதிபதிகள் ஆயம் இதற்கான உத்தரவை வழங்கியுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை, இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்தில் தூதரக உதவியாளராக பணியாற்றிய டி.செந்தில்குமாரி முன்னதாக, சென்னை மேல் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

தாம் தவறான முறையில் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், தம்மை மீண்டும் பணியமர்த்த வேண்டும் எனவும் அவர் கோரியிருந்தார்.

இருப்பினும், அவர் ஒப்பந்த அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டிருந்ததாகவும், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி ஒப்பந்தம் முடிவடைந்ததாகவும், இலங்கை துணை உயர்ஸ்தானிகரக தரப்பு மேன்முறையீட்டில் தெரிவித்துள்ளது.

அத்துடன், மீண்டும் அவரை பணியமர்த்துவதற்கான எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லை எனவும் அந்த தரப்பு வலியுறுத்தியது.

இந்தியாவின் 1947 ஆம் ஆண்டு தொழில் பிணக்கு சட்டத்தின் கீழ், வெளிநாட்டுத் தூதரகங்கள் 'தொழில்' என்ற வரையறைக்குள் அடங்காது எனவும், துணை உயர்ஸ்தானிகரகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதிட்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட அசல் தீர்ப்பில், இந்தியாவில் செயல்படும் வெளிநாட்டுத் தூதரகங்கள், இந்தியக் குடிமக்களை பணியமர்த்தும் போது, இந்தியத் தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்களை கடைப்பிடிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை என, தனி நீதிபதி கூறியிருந்தார்.

1972ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா உடன்படிக்கையின் பிரகாரம் இராஜதந்திர பணியில் உள்ள வெளிநாட்டினர் மட்டுமே, தாம் பணியில் உள்ள நாட்டின் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.

எனினும், உள்ளூர் ஊழியர்களைக் கையாளும் போது, இந்தியாவில் முதலாளிகளுக்குப் பொருந்தக்கூடிய சமூகப் பாதுகாப்பு சட்டங்களை, இராஜதந்திர முகவர்கள் பின்பற்ற வேண்டும் என்று தனி நீதிபதி கூறினார்.

அத்துடன், இந்தியத் தொழிலாளர்களுக்கான சட்ட விதிமுறைகளை மீறுவதற்கு இராஜதந்திர விலக்குரிமையைப் பயன்படுத்த முடியாது என்றும் கூறினார்.

இவ்வாறான பின்னணியில், குறித்த தீர்ப்புக்கு எதிராக இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம் தாக்கல் செய்த மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்டு, முந்தைய தனி நீதிபதியின் தீர்ப்பைச் செயல்படுத்துவதைச் சென்னை மேல் நீதிமன்றின் மூவரடங்கிய நீதிபதிகள் ஆயம் இடைநிறுத்தியுள்ளது.

இந்தநிலையில், இந்தியத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் தூதரக பணிகள், தொழில் என்ற வரையறைக்குள் உள்ளடங்குமா என்பது குறித்து ஆராய உள்ளதாகவும், சென்னை மேல் நீதிமன்றம் நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது.

# தி.மு.கவினரால் என் உயிருக்கு ஆபத்து; பொலிஸில் ஆதவ் அர்ஜுனா முறைப்பாடு



தி.மு.கவினரால் தன் உயிருக்கு ஆபத்து என்று பொலிஸில் த.வெ.க. தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா புகார் அளித்துள்ளார்.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளரான ஆதவ் அர்ஜ/னா சார்பில் அவரது வழக்கறிஞர் மோகன் பார்த்தசாரதி, தி.நகர் துணை ஆணையர் குத்தாலிக்கத்திடம் அளித்துள்ள புகார் மனு ஒன்றை அளித்துள்ளார்.

அதில், "நான் எனது ஆழ்வார்பேட்டை அலுவலகத்தில் கடந்த மாதம் 10 ஆம் திகதி அமர்ந்திருந்தேன். அப்போது எனது அலுவலகத்தைச் சுற்றி தி.மு.க. கொடி கட்டிய ஆட்டோ மற்றும் கார்களில் ஆயுதங்களுடன் சிலர் சுற்றி, சுற்றி வந்தனர். அவர்களால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே எனக்கும், எனது அலுவலகம் மற்றும் இல்லத்துக்கும் உரிய பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும்." என்று அவர் புகார் மனுவில் கூறியுள்ளார்.

இந்த புகார் மனுவுடன் தி.மு.க. கொடி கட்டிய வாகனங்கள் தனது அலுவலகத்தை தொடர்ந்து வட்டமடித்து நோட்டமிட்ட சி.சி.டி.வி. கேமரா காட்சிப் பதிவுகளையும் பொலிஸாரிடம் ஆதவ் அர்ஜுனா சமர்ப்பித்துள்ளார்.

தமிழக அரசு, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோரை அரசியல் சார்ந்து விமர்சித்து வருகிறார் ஆதவ் அர்ஜுனா. இந்நிலையில் அவர் தி.மு.கவினரால் தனது உயிருக்கு அச்சுறுத்தலும், ஆபத்தும் ஏற்பட்டுள்ளது என்று பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

# உக்ரைன் பிரதமர் பதவி விலகினார்

உக்ரைன் பிரதமர் பதவி விலகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்கான கடிதம் ஒன்றை அரசுக்கு அவர் நேற்று அனுப்பி வைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரானது மூன்று ஆண்டுகளை கடந்தும் நீடிக்கிறது.

உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுத மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷ்யாவுக்கு, வடகொரியா இராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்து வருகின்றது.



போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளதுடன் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபடவுள்ளது.

இருப்பினும், போரானது முடிவுக்கு வராமல் உள்ள நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் அரசில் பெரிய அளவில் நேற்று முன்தினம் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, புதிய பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், உக்ரைன் பிரதமராக டெனிஸ் ஷிம்ஹால் பதவி வகித்து வந்த நிலையில் அவர் பதவி விலகியுள்ளார்.

இதையடுத்து, பொருளாதார அமைச்சர் யூலியா ஸ்வைரைடென்கோவை, டெனிஸ் ஷிம்ஹாலுக்கு பதிலாக புதிய பிரதமராக ஜெலன்ஸ்கி அறிவித்து உத்தரவு வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க காப்பகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உடல் கருகிப் பலி

அமெரிக்காவில் காப்பகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

அமெரிக்காவின் மாஸசூசெட் மாகாணத்தில் இயங்கி வரும் மருத்துவ காப்பகம் ஒன்றிலேயே இந்த திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பில் தகவலறிந்த தீயணைப்புத் துறையினர், உடனடியாக சம்பவ பகுதிக்கு விரைந்தனர்.

50 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் அவ்விடத்திற்குச் சென்று, தீ பரவிய இடத்தில் சிக்கியவர்களைக்



காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

காப்பக கதவுகளை உடைத்து, உள்ளே சிக்கி இருந்தவர்களை அவர்கள் பாதுகாப்பாக மீட்டனர்.

இருப்பினும், 9 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

30 இற்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், இச் சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் – ஜெய்சங்கர் சந்திப்பு

சீனஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்த வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இருதரப்பு உறவுகளின் சமீபத்திய வளர்ச்சி குறித்து விளக்கியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) தற்போதைய தலைவராக சீனா உள்ள நிலையில், அந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் சீனா சென்ற ஜெய்சங்கர், அந்நாட்டின் துணை ஜனாதிபதி ஹான் ஜெங்கை சந்தித்துப் பேசினார்.

அப்போது, இந்தியா – சீனா இடையேயான உறவு தொடர்ந்து இயல்பு நிலையில் இருக்க அவர் அழைப்பு விடுத்தார். மேலும், இராணுவ மோதலுக்குப் பிறகு அதாவது 6 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கைலாஷ் மானசரோவர் யாத்திரை தொடங்கி இருப்பது இந்தியாவில் பரவலாகப் பாராட்டப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எஸ்.சி.ஓ. அமைப்பின் வெற்றிகரமான சீன தலைமையை இந்தியா ஆதரிக்கிறது என்று தெரிவித்த ஜெய்சங்கர், இதில் பங்கேற்க இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினார். கடந்த ஆண்டு ஒக்டோபரில் ரஷ்யாவின் கசன் நகரில் பிரதமர் மோடியும் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் சந்தித்துக்கொண்ட பிறகு இருதரப்ப உறவு சீராக மேம்பட்டு வருவதாகக் கூறிய ஜெய்சங்கர், தனது இந்த பயணம் அதை பராமரிக்கும் என நம்புவதாகக் கூறினார்.

சர்வதேச நிலைமை மிகவும் சிக்கலானதாக உள்ள நிலையில், அண்டை நாடுகளாகவும் பெரிய பொருளாதாரங்களாகவும் உள்ள இந்தியாவும் சீனாவும் வெளிப்படைத் தன்மையுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது மிகவும் முக்கியம் என ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், நேற்று காலை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். தனது இந்த சந்திப்பு குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“இன்று காலை பீஜிங்கில் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை எனது சக எஸ்.சி.ஓ. வெளியுறவு அமைச்சர்களுடன் சந்தித்தேன்.

குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். நமது இருதரப்பு உறவுகளின் சமீபத்திய வளர்ச்சி குறித்து அதிபர் ஜி ஜியிடம் விளக்கினேன். அந்த வகையில் நமது தலைவர்களின் வழிகாட்டுதலை மதிக்கிறேன்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.சி.ஓ. வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில், எஸ்.சி.ஓ. அமைப்பின் உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பெலாரஸ் ஆகிய 10 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரின் சீன பயணத்தைத் தொடர்ந்து தற்போது ஜெய்சங்கர் சீனா சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 02

கனடா முரசு

புதன்கிழமை 16/07/2025

## நியூ பிரவுன்ஸ்விக் பகுதியில் 6700 கிலோ கிராம் கஞ்சா மீட்பு





C2▶



# கனடாவின் டொராண்டோவில் காற்று மாசடையும் அபாயகம்

மேற்கு கனடாவில் நூற்றுக் கணக்கான காட்டுத்தீயின் புகை கிழக்கு நோக்கி பரவி வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது டொராண்டோ போன்ற முக்கிய கனேடிய நகரங்களிலும், அமெரிக்காவின் மேல் மத்திய மேற்குப் பகுதிகளிலும் காற்று மாசுபாட்டை அபாயகரமான அளவிற்கு உயர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மிகப்பெரிய நகரமான டொராண்டோவில் திங்கட்கிழமை மேகமூட்டமான வானம் நிலவுவதாகவும், மேலும் சுற்றுச்சூழல் கனடாவின் அதிகாரிகள் காற்றின் தர எச்சரிக்கையை வெளியிட்டனர்.

உலகளாவிய காற்று கண்காணிப்பு தளமான IQAir இன் கூற்றின்படி, திங்கட்கிழமை பிற்பகல் டொராண்டோவின் காற்றின் தரம் உலகெங்கிலும் மிக மோசமான இடங்களில் ஒன்றாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது .

மேலும், டொராண்டோ மற்றும் ஒன்ராறியோவின் பிற பகுதிகளில் கடுமையான வெளிப்புற நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கனடா குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்காவில், கிரேட் லேக்ஸ் பகுதியிலும் காற்றின் தரம் குறைந்துள்ளது, குறிப்பாக வடக்கு மினசோட்டா மற்றும் விஸ்கான்சின், மேற்கு நியூயோக் மற்றும் வடக்கு பென்சில்வேனியாவில் இந்த நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரம்டன் முதல்வருக்கு கொலை மிரட்டல்

பிரம்டன் நகர முதல்வர் Patrick Brown-னுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் சமூகத்திற்கான அவரது ஆதரவுக்கும் இந்த அச்சுறுத்தலுக்கும் தொடர்பில்லை என Peel பிராந்திய பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்னர் நகர முதல்வர் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும், அவரது மனைவி, மகன் ஆகியோரும் இந்த மிரட்டலில் குறிப்பிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.



இந்த விடயம் குறித்து செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் முன் வைத்த கேள்வியைீநநட பிராந்திய பொலிஸ் துணைத் தலைவரிடம் முன்வைக்குமாறு Patrick Brown கோரினார்.

குறிப்பிட்ட அச்சுறுத்தல் கனடாவிற்குள் இருந்து வந்ததைீநநட பிராந்திய பொலிஸ் துணைத் தலைவர் Nick Milinovich உறுதிப்படுத்தினார். நகர முதல்வருக்கும் அவரது இல்லத்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு இரண்டு வாரங்கள் நீடித்ததாகவும், தமது விசாரணையின் வெற்றி காரணமாக குறிப்பிட்ட பாதுகாப்பு மீள பெறப்பட்டதாகவும் Nick Milinovich தெரிவித்தார்.

விரைவில் இந்த சம்பவம் குறித்து மேலதிக விவரங்களை பகிர்ந்துகொள்ள அவர் உறுதியளித்தார்.





# நியூ பிரவுன்ஸ்விக் பகுதியில் 6700 கிலோ கிராம் கஞ்சா மீட்பு

கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் பகுதியில் சுமார் 6700 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதைபொருள் மீட்கப்பட்டுள்ளது.

நியூ பிரவுன்ஸ்விக் மாகாணத்தின் ளுயலைவெ துழாெ துறைமுகத்தில், 6,700 கிலோகிராம் சந்தேகத்திற்குரிய கஞ்சா பிடிபட்டுள்ளதாக கனடிய எல்லைப் பாதகாப்புப் பிரிவு Canada Border Services Agency (CBSA) தெரிவித்துள்ளது.

இது கடந்த ஒரு தசாப்தத்தில் மீட்கப்பட்ட மிகப் பெரிய கஞ்சா தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கஞ்சா தொகை, ஸ்காட்லாந்துக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டிருந்த ஒரு கடல் சரக்குக் கொண்டெய்னரை கனடிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

இதில், மொத்தம் சுமார் 49.6 மில்லியன் டொலர் மதிப்பிலான கஞ்சா பதுக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கஞ்சா போதைப் பொருள் 400 பெட்டிகளில் மறைக்கப்பட்டிருந்தன, மேலும் இது 2024ஆம் ஆண்டில் கனடா முழுவதும் கனடிய எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிடித்த கஞ்சா அளவை விட மூன்று மடங்கு அதிகமானது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கனடாவில் தண்ணீரில் மூழ்கி 6 வயது சிறுமி உயிரிழப்பு

கனடாவின் டைனி டவுன்சிப் (Tiny ) Township பகுதியில் உள்ள டென்லியா (Deanlea Beach) கடற்கரையில், ஞாயிற்றுக்கிழமை இரவு நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட 6 வயது சிறுமி ஒருவர், பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்ததாக ஒன்றாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அவசர சேவைகள் பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

தீயணைப்பு மற்றும் மருத்துவ பணியாளர்கள் குழந்தையின் உயிர்காக்கும் முயற்சிகளை மேற்கொண்டு, அவசரமாக அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

சம்பவ இடத்திலும் மருத்துவமனையிலும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளுக்கும் பின்னர், ஒரிலியாவைச் சேர்ந்த




6 வயது சிறுமி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமியின் மரணத்துக்கான காரணம் சந்தேகத்திற்குரியதல்ல என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உடற்கூறு பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.